# முல்லைத்தீவு மாவட்டத்தின் "ஐரோப்பியர் காலச் சின்னங்கள்" - ஓர் ஆவணப்படுத்தல்"

LIBRARY
0 9 OCT 2020
EUSL SRI LANKA

பெயர் : கனகராசா சஜீவனா

பதிவு இலக்கம் : EU/IS/2013/AC/229

சுட்டெண் : 5379

FAC 819
Project Report
Library - EUSL

இவ்வாய்வுக் கட்டுரையானது இளங்கலைமானி வரலாற்றுச் சிறப்புப் பட்டக் கற்கை நெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அலகாகக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்கு சமர்பிக்கப்படுகின்றது.

வரலாற்றுத்துறை,

கலைகலாசாரபீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

2019.

PROCESSED
MAIN LIBRARY, EUSL

# முன்னுரை

கிழக்குப் பல்கலைக்கழத்தில் கலைகலாசார பீடத்தில் வரலாற்றுத் துறையில் சிறப்பு கற்கையாக பயிலும் நான் எனது சிறப்பு கலைமானி பட்டகற்கைகாக **“முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐரோப்பியர் கால சின்னங்கள் - ஓர் ஆவணப்படுத்தல்”** எனும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டுள்ளேன்.

கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலேயே வன்னியர் சமூகத்தினரின் குடியேற்றம் இலங்கையில் ஏற்பட்டு விட்டது. கி.மு 50ஆம் ஆண்டளவில் இக்குடியேற்றம் ஏற்பட்டதென கலாநிதி செ.நடராசா என்பவர் கூறுகின்றார். மட்டக்களப்பு மான்மியம் கி.பி 100 இல் இக்குடியேற்றம் நடைபெற்றதெனக் கூறுகின்றது. வன்னி எனும் பெயர் தமிழ் நாட்டு ஆவணங்களிலே பதினோராம் நூற்றாண்டிலும் அதன் பின்பே இலங்கையிலும் வன்னியர் சமூகம் வாழ்ந்திருக்கின்றது என்பதனை ஆதாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

அடங்காப்பற்று வன்னியர்கள் வடக்கே யாழ்ப்பாண அரசுக்கோ தெற்கே அனுராதபுர அரசுக்கு அடங்க மறுத்திருக்கின்றனர். பெயரளவில் மாத்திரம் வன்னி அரசுகள் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு கீழ்ப்பட்டதாக கருதப்பட்டது. ஆரியச் சக்கரவர்த்திகளில் சிலர் மட்டும் தமது மேலாணையை வன்னியில் செலுத்தி திறை பெற்றனர். எனினும் வன்னிப்பிரதேச நிர்வாகத்தை வன்னியரே மேற்கொண்டனர். முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களை வன்னி என அழைக்கின்றனர் முல்லைத்தீவு மாவட்டம் வன்னிச் சிற்ரரசுகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு காணப்பட்டது.

இவ்வாறான காலப்பகுதியில் ஐரோப்பியர் ஆட்சியானது இலங்கையிலும் ஏற்பட்டுக் கொண்டது. முல்லைத்தீவு மாவட்டத்திலும் ஐரோப்பியர் ஆட்சியானது ஏற்பட்டுக் கொண்டது. இவர்களது ஆட்சியில் இம்மாவட்டத்தில் பல மாற்றங்கள் சமயம், சமூகம், பொருளாதாரம், கல்வி, நிர்வாகம் என்பனவற்றில் மாற்றம் ஏற்பட்ட காலப்பகுதியாக காணப்படுகின்றது. ஐரோப்பியர் காலத்தில் கட்டுமானங்கள் பல இடம்பெற்றன. இவை முழுமையான ஆவணப்படுத்தப்படவில்லை. உதிரிகளாக மாத்திரமே இடம்பெற்றுள்ளது. இதனை முழுமையாக ஆவணப்படுத்தலே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வை மேற்கொள்வதில் பல சவால்கள் காணப்பட்டது. முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. இயற்கை அனர்த்தங்களாலும் யுத்தத்தினாலும் ஆவணங்கள் அழிவடைந்துள்ளமையே பிரதான காரணமாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றினை பிரித்தானியர் காலத்தில் வெளிவந்த ஆண்டறிக்கைகள், ஆண்டுமலர்கள், சஞ்சிகைகள், நூல்கள், நேர்காணல்கள் போன்றவற்றின் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளின் அடிப்படையில் இவ்வாய்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ்வாய்வானது ஆறு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. முதலாவது அத்தியாயத்தில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வின் அறிமுகம், ஆய்வு வரையறை, ஆய்வின் நோக்கம், ஆய்வு கருதுகோள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வுப் பிரச்சினை, இலக்கிய மீளாய்வு, அத்தியாயப் பகுப்பு ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

இரண்டாவது அத்தியாயத்தினுள் பிரதேச அறிமுகம், ஐரோப்பியர் காலத்திற்கு முன்னைய முல்லைத்தீவின் நிலை எனும் பிரிவிற்க்குள் ஈழத்து வன்னியர்கள், முல்லைத்தீவில் வன்னியர் ஆட்சி, வன்னியராட்சியில் வன்னியில் காணப்பட்ட சாதி மற்றும் இனங்கள், மன்னன் பண்டார வன்னியன் போன்ற பகுதிகளைக் கொண்டதாக அமைகின்றது.

மூன்றாவது அத்தியாயத்தினுள் ஐரோப்பியர் ஆட்சியும் முல்லைத்தீவு பிராந்தியமும் எனும் பிரிப்பிற்குள் இலங்கையில் ஐரோப்பியர் ஆட்சி, முல்லைத்தீவில் போர்த்துக்கேயர் ஆட்சி, ஒல்லாந்தர் ஆட்சி, ஆங்கிலேயர் ஆட்சி போன்ற பிரிப்புக்களின் மூலம் நோக்கப்படுகின்றது.

நான்காம் அத்தியாயம் ஐரோப்பியர் கால கட்டுமானங்கள் என்ற விடைத்தில் நிர்வாகக் கட்டுமானங்கள், கத்தோலிக்க, இந்து, புரட்டஸ்தாந்து தேவாலயங்கள், கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து, இந்து, பாடசாலைகள், நினைவுச் சின்னங்கள், வீதிகள், உப்புக் களஞ்சியம், தங்குமிட மடங்கள் போன்றன இவ்வத்தியாயத்தினுள் ஆராயப்படுகின்றது.

ஐந்தாவது அத்தியாயம் ஐரோப்பியர் காலத்திற்கு முன்னைய முல்லைத்தீவினுடைய சமூக, பொருளாதாரம் போன்ற விடயங்களின் ஊடாக நோக்கப்படுகின்றது.

ஆறாவது அத்தியாயம் முடிவுரை அமைகின்றது.

இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையுடன் சேர்ந்த ஆய்வாகக் காணப்படுகின்றதால் ஐரோப்பியர் கால சின்னங்கள் பற்றி பிற்கால ஆய்விற்கான சிறு உதவியாக இருக்கும்.

ஆய்வாளர்.

# உள்ளடக்கம்

முன்னுரை

நன்றியுரை

## அத்தியாயம் ஒன்று

1.0 ஆய்வு அறிமுகம் 1 - 6

## அத்தியாயம் இரண்டு

2.0 ஐரோப்பியர் காலத்திற்கு முன்னைய முல்லைத்தீவு 7 - 37

## அத்தியாயம் மூன்று

3.0 இலங்கையில் ஐரோப்பியர் ஆட்சியும் முல்லைத்தீவு பிராந்தியமும் 38 - 51

## அத்தியாயம் நான்கு

4.0 ஐரோப்பியர் கால கட்டுமானங்கள் 52 - 91

## அத்தியாயம் ஐந்து

5.0 ஐரோப்பியர் ஆட்சிக்கு முல்லைத்தீவினுடைய சமூக,பொருளாத 92 - 97

## அத்தியாயம் ஆறு

6.0 தொகுப்பரை 98 - 103

7.0 உசாத்துணைகள்